பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
17 12 2024 6 45
செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. இலங்கையின் வளர்ச்சிக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. ஒரே நாடு - ஒரே தேர்தல் தொடர்பான மசோதா மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

3. மீனவர்கள் விவகாரத்தில் மனித நேய அடிப்படையில் தீர்வு காண்பது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடியும் இலங்கை அதிபர் திரு அனுரா குமார திசநாயக-வும் ஆலோசனை நடத்தியது வரவேற்கத்தக்கது என தமிழக முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி மும்பையில் இன்று நடைபெறுகிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

இலங்கையின் வளர்ச்சிக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

இலங்கை அதிபர் திரு அனுரகுமார திசாநாயகா, குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற விருந்து நிகழ்ச்சியில் நேற்று பங்கேற்றார்.

அப்போது பேசிய குடியரசுத் தலைவர், அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற இந்தியாவின் கொள்கையின் அடிப்படையிலும் கடல் சார் தொலைநோக்கு கொள்கையிலும் இலங்கை முக்கிய அங்கமாக திகழ்கிறது என்றார்.

இந்தியாவின் உதவிகள் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கும் ஸ்திரத்தன்மைக்கு உதவும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கை அதிபரின் இந்த இந்தியப் பயணம் இந்தப் பயணம் இருதரப்பு நல்லுறவை மேலும் வலுப்படுத்த உதவும் என திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

குடியரசுத்துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கரையும் இலங்கை அதிபர் திரு திசநாயக சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

<<<<>>>>

ஒரே நாடு - ஒரே தேர்தல் தொடர்பான 2 மசோதாக்கள் மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்படுகின்றன.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 129வது திருத்த மசோதா மற்றும் யூனியன் பிரதேசங்கள் திருத்தச் சட்ட மசோதாவை மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால் தாக்கல் செய்கிறார்.

இந்த மசோதாக்கள் இன்று தாக்கல் செய்யப்படும் என இன்றைய அவை நடவடிக்கைகளுக்கான அலுவல் பட்டியலில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையொட்டி பிஜேபி உறுப்பினர்கள் அனைவரும் இன்று தவறாமல் அவை நடவடிக்கைகளில் பங்கேற்க வேண்டும் என அக்கட்சி, கொறடா உத்தரவு பிறப்பித்துள்ளது.

<<<<>>>>

அரசியல் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் 75வது ஆண்டு நிறைவை ஒட்டி மாநிலங்களவையில் சிறப்பு விவாதம் இரண்டாவது நாளாக இன்றும் நடைபெறுகிறது.

விவாதத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜேபி. நட்டா தொடங்கி வைத்துப் பேச உள்ளார்.

இன்று மாலை பிரதமர் திரு. நரேந்திர மோடி விவாதங்களுக்கு பதிலளித்துப் பேசவுள்ளார்.

<<<<>>>>

மீனவர்கள் விவகாரத்தில் மனித நேய அடிப்படையில் தீர்வு காண்பது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடியும் இலங்கை அதிபர் திரு அனுர குமார திசநாயக-வும் ஆலோசனை நடத்தியது வரவேற்கத்தக்கது என தமிழக முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதற்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிப்பது குறித்து இலங்கை அதிபர் பரிசீலிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரதமரும் - இலங்கை அதிபரும் நடத்திய பேச்சுவார்த்தை நம்பிக்கை அளித்துள்ளதாகவும், இது இரு நாடுகளுக்கு இடையேயான வலுவான நல்லுறவுக்கு வழிவகுக்கும் என்றும் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சென்னை சங்கமம் நிகழ்ச்சி ஜனவரி 14ஆம் தேதி முதல் 17ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக மாநில செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 18 இடங்களில் இந்த விழா நடைபெற உள்ளதாகக் கூறினார்.

தினமும் மாலை 6 மணி முதல் இரவு 9.30 மணி வரை கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று திரு. மு.பெ. சாமிநாதன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தின் அரசுப் பள்ளிகளில் ஆய்வகங்களை நவீனமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

கோவையில் கல்வி அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்றபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் தற்போது பொதுத் தேர்வுகளில் தேர்ச்சி விகிதம் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார்.

மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பள்ளிகளில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான பாடப்பிரிவு விரைவில் தொடங்கப்படும் என்றும் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் நெடுஞ்சாலைத்துறையின் கீழ் உள்ள சாலைகளில் உடனுக்குடன் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பழுதுகள் சீரமைக்கப்படுவதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. எ.வ. வேலு கூறியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது தொடர்பான புகார்களைத் தெரிவிக்க 'நம்ம சாலை' என்ற செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

<<<<>>>>

போதைப்பொருள் கடத்தல் வழக்கில் கைதான ஜாபர் சாதிக்கிற்கு தமிழ்நாடு பாட நூல் கழகம் மறைமுகமாக உதவியுள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அமலாக்கத்துறை விசாரணையில் இது தெரிய வந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி விளக்கம் அளிக்க வேண்டும் என திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

நேரு யுவகேந்திரா சார்பில் நாகையில் இளையோர் திருவிழா நடைபெற்றது.

இதில் பள்ளி-கல்லூரி மாணவ - மாணவிகளின் புதுமைக் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் வகையில் கண்காட்சி நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் சில இடங்களில் மிக கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

பங்களாதேஷில் அடுத்த ஆண்டு இறுதியில் அல்லது 2026-ம் ஆண்டு தொடக்கத்தில் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என அந்நாட்டு இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் திரு முகமது யூனுஸ் கூறியுள்ளார்.

<<<<>>>>

இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்குக் கடத்தப்பட்ட 297 தொல்பொருட்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாடு முழுவதும் கடந்த 10 ஆண்டுகளில் 97 புதிய இஎஸ்ஐ மருத்துவமனைகளைத் தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்த்லாஜே கூறியுள்ளார்.

<<<<>>>>

நடப்பு ரபி பருவத்தில் நாட்டில் பயிர் விதைப்பு 558 லட்சம் ஹெக்டேரைத் தாண்டியுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உடான் திட்டத்தின் கீழ் தமிழகத்தின் 26 வழித்தடங்கள் உட்பட நாடு முழுவதும் 613 வழித்தடங்களில் விமானங்கள் இயக்கப்படுவதாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் திரு முரளிதர் மொஹல் கூறியுள்ளார்.

<<<<>>>>

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இ-ஷ்ரம் இணையதளத்தில் இம்மாதம் 9-ம் தேதி வரை நாடு முழுவதும் 30 கோடியே 45 லட்சம் பேர் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கட்டணமில்லா அறுபடை வீடு ஆன்மீக பயணத்தின் இரண்டாம் கட்டப் பயணம் இன்று பழனியில் தொடங்குவதாக தமிழக இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு சேகர் பாபு கூறியுள்ளார்.

<<<<>>>>

திருவண்ணாமலை மாவட்டம் நாடழகானந்தலில் கோமாரி நோய் தடுப்பூசி முகாமை சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு கு. பிச்சாண்டி தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

தருமபுரி மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாமின்போது கால்நடைகளுக்கு 3 லட்சத்து 56 ஆயிரம் டோஸ் தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி சாந்தி கூறியுள்ளார்.

<<<<>>>>

தென்காசியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 66 லட்சம் ரூபாய் மதிப்பிலான கடன் உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு கமல் கிஷோர் வழங்கினார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சியில் நகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு, நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு எம்.எஸ். பிரசாந்த் வழங்கினார்.

<<<<>>>>

மதுரை திருப்பரங்குன்றம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் இன்று நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சென்னை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்களுக்கு மடிக்கணினியுடன் கூடிய ஒளிப்படக் கருவிகளை மேயர் திருமதி பிரியா நேற்று வழங்கினார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்தி*

இந்தியா வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

மும்பையில் இரவு 7 மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

<<<<>>>>